# செங்கொடி

செப்டம்பர்-பெப்ரவரி 2012




## அரச தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வோம்

வாழ்க்கைச் செலவோடு போராடி வரும் தொழிலாளர்களில், தோட்ட தொழிலாளர்கள் முதலிடத்தை வகிக்கின்றனர். அதிலும் அரச தோட்டங்களில் வாழும் தொழிலாளர்கள் இவ்வாழ்க்கை செலவு அதிகரிப்பில் அதிக பாதிப்புக்குள்ளாகி இருப்பதை யாராலும் மறுக்க முடியாது. 1992 ஆம் ஆண்டு தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்ட போது கம்பனிகளுக்கு கொடுக்க முடியாமல் போன தோட்டங்களே அதிகமாக JEDP,SPC ஆகியவற்றின் பராமரிப்பின் கீழ் உள்ள தோட்டங்கள் ஆகும். இத்தோட்டங்களை செழிப்புள்ள தோட்டங்களாக மாற்ற திட்டமிட்டபோதும், பாரிய முதலீடுகள் நடைபெறாமை காரணமாக இத்தோட்டங்களின் பராமரிப்பிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து, இங்கு சிறப்பான முறையில் கொழுந்து எடுப்பதற்கான நிலை காணப்படவில்லை. எனவே தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் வேலை நாட்கள் குறைவடைந்தது. வேலை நாட்கள் குறைவடைந்ததைத் தொடர்ந்து வாழ்க்கைச் செலவை சமாளிப்பதற்கான வருமானம் இன்றி இத்தொழிலாளர்கள் பட்டினியை நோக்கி தள்ளப்படும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். இவ்விக்கட்டான சூழ்நிலையில் இவர்கள் மற்றுமொரு வாழ்வாதார சிக்கலுக்கு முகங் கொடுக்க வேண்டி உள்ளது. அதாவது இத்தோட்டங்களில் பாரிய லாபம் இல்லை என்பதாலும், ஏனைய சில தரிசு நிலங்களோடு இத்தோட்டங்களும் அரசு விற்பனை செய்யவுள்ள நிலப்பட்டியலில் அடங்கி உள்ளது.

உதாரணமாக 2010 ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி வெளிவந்த லங்காதீப பத்திரிகையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சியினால் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் கீழ்வரும் அரச தோட்டங்கள் விற்பனைக்கு விடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

| நிறுவனம் | தோட்டங்கள் | காணி/ஹெக்டேயர் |
|---|---|---|
| JEDP | கிரேட்வெளி | 476.1 ஹெக்டேயர் |
| | போபிட்டிய | 321.0 ஹெக்டேயர் |
| | பழய்வத்த | 587.0 ஹெக்டேயர் |
| SLSPC | எயார்பார்க் | 976.8 ஹெக்டேயர் |
| | டௌன்சைட் | 472.8 ஹெக்டேயர் |

மொத்தமாக 2837.7 ஹெக்டேயர். இந்நிலப்பரப்பை சிறு போக விளைச்சலகளுக்கும், தரிசு நிலங்கள் என்ற அடிப்படையிலும் அரசு விற்பனைக்கு விட்டுள்ளது. உண்மையில் இந்நிலங்கள் தரிசு நிலங்கள் அல்ல. இன்றும் இத்தோட்டங்களில் தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். இத்தொழிலாளர்களின் கருத்துப்படி தோட்டங்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்படும் பட்சத்தில் சிறந்த வருமானத்தை ஈட்டலாம் என்பதாகும்.

இத்தோட்டங்ளைப் பொறுத்தளவில் ஒழுங்காக தோட்டம் பராமரிக்கப்பட்ட காலங்களில் தொழிலாளர்களுக்கு சிறந்த வருமானம் ஈட்டக்கூடிய வகையில் வேலைநாட்கள் வழங்கப்பட்டுள்ளன, என தெரிவித்தனர். இதேபோல ஏனைய சில தோட்டங்களும் லாபம் குறைவாக வருவதைக் காரணங்காட்டி, வேறு தேவைக்கு அந்நிலங்களை பயன்படுத்த முயற்சி எடுத்து வருவது தெரிய வந்துள்ளது. குறிப்பாக ஹந்தான தோட்டப்பகுதியில் 75 ஹெக்டேயருக்கும், மேற்பட்ட காணி விற்பனைக்கு விடப்படுவதாக கூறப்பட்டு நிலஅளவையாளர்களினால் அளக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்குள்ள தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியதன் விளைவு தற்போதைக்கு நிலம் கைமாறுவது நிறுத்தப்பட்டுள்ளது. இருந்த போதும், இவ்வாறு **நிலம்** விற்கப்படும் பட்சத்தில் தொழிலாளர்கள் தங்களது தொழிலை இழப்பதோடு, அவர்களது வாழ்விடங்களையும் இழக்க வேண்டிய நிலை இத்தோட்டங்களில் உருவாகி உள்ளது.

மேலும், எயார்பார்க் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும், தங்களது தோட்டம் மூடப்படும் நிலையில் தாங்கள் தொழிலை இழப்பதோடு, இதுவரைக்காலமும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, சேவாகால பணம் போன்ற பல உரிமைகள் வழங்கப்படாத இந்நிலையில் தோட்டம் விற்கப்படும் பட்சத்தில் தங்களுக்கு கிடைக்கவேண்டிய எவ்விதமான கொடுப்பனவும் கிடைக்கப்பெறாமல் போகலாம் என்ற அச்ச நிலைஇவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆகவே, இவ்வரச தோட்ட தொழிலாளாளர்கள் தங்களது வாழ்வாதார பிரச்சினையை முன்வைத்து பல்வேறு மட்டங்களிலும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறாக ஆண்டாண்டுக்காலமாக இந்நாட்டுக்கு அன்னிய செலாவணியை ஈட்டித்தந்து நாட்டை வளப்படுத்திய தொழிலாளர்கள் இன்று தங்களது வீடு வாசல்களை இழந்து நடுரோட்டிற்கு வரும் நிலைக்கு தங்களது வாழ்வாதாரங்கள் சீர்குலைந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

**இத்தொழிலாளர்களது பிரதான நோக்கங்களாக அமைவது:**

- ❖ தற்போது பயிர்செய்கைக்கு உட்பட்டு இருக்கும் நிலங்களும், பயிர்செய்கைக்கு உட்படாத நிலங்களும், சமமாக பங்கிடப்பட்டு, அப்பகுதி தொழிலாளர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.
- ❖ இப்பயிர் செய்கைக்கு தேவையான உரம், விதை, கிருமிநாசினி, போன்றனவற்றை மானியமாக அரசு ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கு தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.
- ❖ தொழிலாளர் பறிக்கும் கொழுந்தினை அரசு கொள்வனவு செய்தல் வேண்டும்.
- ❖ கொழுந்து குறைவாக இருக்கும் காலங்களில் மாற்று வருமான ஈட்டல் முறையினை ஏற்படுத்துவதற்காக, தேயிலை பயிர்செய்கையோடு ஒத்துப் போகக் கூடிய மாற்று பயிர்செய்கையை அறிமுகப்படுத்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெவ்வேறு துறையிலிருந்தாலும், தொழிலாளர் வர்க்கமாகப் போராடுவோம் !

பல சவால்களுக்கும், சுரண்டல்களுக்கும் முகங் கொடுத்த தோட்ட தொழிலாளர்கள் அந்நிலைக்கு தங்கள் சந்ததியினர் தள்ளப்படுவதை விரும்பாத தன்மை இன்று பரவலாக காணப்படுகின்றது. பிள்ளைகளுக்குக் சிறந்த கல்வியைக் கொடுத்து தாங்கள் முகங்கொடுக்கும் வறுமையிலிருந்து மீட்டெடுக்க பல தொழிலாள பெற்றோர் முயற்சி செய்து வருகின்றார்கள். அத்தோடு பெருந்தோட்டத்துறை, இளைஞர்களை ஈர்க்கும் ஒரு துறையாக இல்லாமையால், இளைஞர்கள் இத்துறைக்குள் பிரவேசிப்பதில் ஒரு பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

பல நூற்றாண்டு காலமாக இலங்கைக்கு வருமானம் ஈட்டித்தந்த ஒரு தொழிற்துறை மழுங்கடிக்கப்பட்டு வருவதோடு; தொழிலாள வர்க்கம் ஒழுங்கமைக்கப்படாத தொழிற்துறையை நோக்கி தள்ளப்படுகின்றார்கள். தோட்டத்தொழில் செய்வதற்கூடாக கிடைக்கும் தொழில் உரிமைகள் மற்றும் தொழில் சலுகைகள் என்பவற்றை (EPF, ETF, பிரசவ சகாய நிதி, தொழில் பாதுகாப்பு......) ஒழுங்கமைக்கப்படாத துறைகளுக்கு தொழிலாளர்கள் தள்ளப்படும் போது இவ்வுரிமைகளை இழக்க நேரிடுகின்றது. இவ்வாறான ஒரு தொழில் துறையை தக்கவைத்து அதில் எவ்வாறு தொழில் உரிமைகளையும், சலுகைகளையும் மேலும் பெற்றுக் கொள்ளலாம்.



அதற்காக எவ்வாறு போராடலாம் என்ற சிந்தனை தொழிலாளர்கள் மத்தியில் தெளிவு ஏற்படவோ அல்லது ஏற்படுத்தப்படவோ இல்லை. மேலும், தேயிலைத் தொழிலில் இளைஞர்களை கவரும் வகையிலும், புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்தியும், அத்தொழிலை கௌரவமான தொழிலாக அமைப்பதோடு, இத்தொழிலாளர்களுக்கு சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலை ஏற்படுத்தப்பட்டு, தோட்டங்கள் சிறப்பாக பராமரிக்கப்படுமாயின் நாட்டின் வருமானம் மேலும் அதிகரிப்பிற்கு உள்ளாகும். அதற்கூடாக தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படும் ஒரு நிலை உருவாக்கப்படுமேயானால் இளம் தொழிலாளர்கள் இத்தொழிலில் ஆர்வமாக ஈடுபடுவார்கள்.

இதே சந்தர்ப்பத்தில் தோட்ட நிர்வாகமும் இளைஞர்களை பெயர் பதிந்து வேலைக்கு சேர்ப்பதை சுத்தமாக நிறுத்தியும், குறைத்தும் வருகின்றது. இதன் காரணமாக தோட்டங்களில் வேலை செய்யும் இளைஞர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. தோட்ட நிர்வாகங்களானது திட்டமிட்டே இச்செயற்பாட்டை செய்கின்றது. இளைஞர்களை இத்துறைக்குள் சேர்க்காத காரணத்தால் EPF,ETF பிரசவசகாய நிதி உட்பட பல்வேறு பட்ட கொடுப்பனவுகளை நிர்வாகங்கள் வழங்க வேண்டி இருக்காது என்பதற்காக, பென்சன் சென்ற பல தொழிலாளர்களுக்கு மீண்டும் புதிய EPF இலக்கங்கள் வழங்கி தொழிலாளர்களை வேலைக்கு சேர்க்கின்றனர். இவ்வாறு சேர்ப்பதன் மூலம் தொழிலாளர்கள் பலவகை சுரண்டலுக்குள்ளாகின்றார்கள். இந்நிலையில் இங்குள்ள இளைஞர்கள் ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்களாகவும், வீட்டு வேலை தொழிலாளர்களாகவும், கடைகளுக்கும், ஹோட்டல்களுக்கும் வேலைக்கு செல்கின்றார்கள். அந்த துறைகளிலும் இத் தொழிலாளர்கள் பல்வேறு சவால்களுக்கு முகங் கொடுக்கின்றார்கள். உதாரணமாக இவ்வாறு செல்லும் தொழிலாளர்களில் வீட்டுவேலை தொழிலாளர்களாக செல்பவர்கள் 14 வயது தொடக்கம் 60 வரையும் காணப்படுகின்றார்கள். இதில் அதிகமானோர் 4000- 6000 ரூபா வரையிலான மாத சம்பளத்தை பெற்றுக் கொள்வதோடு பல்வேறுப்பட்ட வகையில் தொழில்சுரண்டல்களுக்கும் உள்ளாகின்றார்கள். இத் தொழிலாளர்களுக்கு சம்பளம் முறையாக கொடுக்கப்படுவதில்லை. பல தொழிலாளர்களுக்கு அவர்களது சம்பளத்தை அவர்கள் கைகளில் அல்லது அவர்களது தாய்,தந்தை அல்லது அவர்களை வேலைக்குச் சேர்த்த புரோக்கர்மார்களின் கைகளில் வழங்குகின்றார்கள். இத் தொழிலாளர்கள் ஒழுங்கமைக்கப்படாத தொழிலாளர்களாக காணப்படுவதும் இத் தொழிலாளர்களின் பிரச்சினைகளின் போது செயற்படுவதற்கு பாரிய தடைகள் காணப்படுகின்றன. இத் தொழிலாளர்களுக்கு வேலைத்தள பாதுகாப்புகள் இல்லாமையும் இத் தொழிலாளர்கள் வேலைத்தளத்தில் தனித்துவிடப்படுவதன் காரணமாகவும் சுரண்டல்களுக்கு உள்ளாக்கப்பட்டு தொழில் உரிமைகளை இழப்பதைப் போலவே பாலியல் வல்லுறவுகளுக்கும் உள்ளாகின்றார்கள்.

தொடர்ச்சி 3ம் பக்கம் ....

2ம் பக்கம் தொடர்ச்சி ...

அதேபோல கடைகளுக்கும், ஹோட்டல்களுக்கும் வேலைக்கு செல்லும் தொழிலாளர்கள் ஒழுங்காக விடுமுறைகள், கொடுப்பனவுகள் இன்றி சுரண்டப்படுகின்றார்கள். இவர்களுக்கு சட்டப்படி தொழில்உரிமைகள் காணப்பட்ட போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில்லை. அதிகமான தொழிலாளர்களுக்கு தங்களது சட்டபாதுகாப்புகள், தொழில் உரிமைகள் பற்றி தெரிந்து கொள்ளாமல் இருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். மேலும் கடைகளிலும், ஹோட்டல்களிலும் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு சட்டங்கள் காணப்பட்ட போதும் அவற்றை நடைமுறைபடுத்துவதில் பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதிகமான தொழிலாளர்கள் தங்களுக்கு சட்ட பாதுகாப்பை பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் அறியாமல் இருந்து வருகின்றார்கள்.இத் தொழிலாளர்கள் விடுமுறைகள் இன்றி EPF,ETF இன்றி இன்னும் பல உரிமைகளை இழந்து எட்டுமணி நேரத்திற்கு அதிகமான வேலை செய்து குறைந்த ஊதியத்தை பெறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆடைத்தொழிற்சாலை தொழிலாளர்களைப் பார்க்கும் போது இவர்கள் தொழிற்சங்கம் ஒன்றில் இணைவதற்கோ, தமது உரிமைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கோ அல்லது ஏதேனும் தொழிற்சங்க நடவடிக்கையில் பங்கெடுப்பதற்கோ, முடியாமல் உதிரிகளாகக் காணப்படுகின்றார்கள். இங்குள்ள தொழிலாளர்களுக்கு அதிக வேலைநேரம்,வேலைப்பளு சாப்பிடுவதற்கான நேர ஒதுக்கீடு இல்லாமை, சுகாதார வசதிகள் இன்மை, விடுமுறை வழங்குவதில் தடை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றார்கள். குறிப்பாக ஒருநாள் அனுமதி இன்றி விடுமுறை எடுக்கும் பட்சத்தில் அவர்களின் Service உடைக்கப்படல், போன்றவற்றைக் குறிப்பிடலாம்.


ஆடைத்தொழிற்சாலை தொழிலாளர்கள், வீட்டுவேலைத் தொழிலாளர்கள் போன்ற இரு துறைகளை சார்ந்த தொழிலாளர்களுக்கு தாங்கள் வேலை செய்யும் இடம் தொடர்பாகவும், தொழில் வழங்குனர்கள் தொடர்பாகவும் சரியான தகவல்களை தம் வசம் வைத்திருப்பதில்லை. இது இவர்களது பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுக்க முற்படும் போது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது. எனவே, ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்கள்

**தங்களது கம்பனியின் உரிமையாளர்கள் யார்? கம்பனியின் சரியான பெயர் வேலைக்குச் சேர்கின்ற போது தொழில் நியமண கடிதம் வழங்கப்படுகின்றதா? என்பதோடு தங்களுக்கான தொழில் சட்டங்களை அறிந்திருப்பது மிகவும் அவசியம்.**

**அதே போலவே வீட்டுவேலை தொழிலாளர்களும் தங்களது தொழில் வழங்குனர் யார்? அவரது பெயர், வீட்டு விலாசம் தங்களுக்கு கிடைக்கப் பெறும் சம்பளம் எவ்வளவு போன்ற விடயங்களை அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும்.**

எனவே, இம்மூன்று துறைகளை சார்ந்த தொழிலாளர்களை பார்க்கும் பட்சத்தில் மாறுபட்ட ரூபங்களில் தொழிலாளர்கள் அனைவரும் ஒரே பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றார்கள். தொழில் சுரண்டல், பாலியல் சுரண்டல்கள் என்பவற்றோடு குடும்ப சுமையையும் அதிகமாக பெண் தொழிலாளர்களே சுமக்கின்றார்கள்.
வெவ்வேறு துறைகளைச் சார்ந்த தொழிலாளர்களானாலும் அனைவரும் தொழிலாளவர்க்கத்தை சேர்ந்த உடல் உழைப்பாளர்களே. எனவே, இவர்களின் உரிமைமீறல் எதிர்நடவடிக்கைக்கு இவர்களின் ஐக்கியம் மிக அவசியம்.

முதலாளித்துவ கட்டமைப்பு தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சி தமது லாபத்தை பெருக்கி கொள்ளும் நோக்கத்தோடு செயல்படுகின்றது என்பது எவ்வளவு உண்மையோ அந்த அளவில் சமூகத்தில் காணப்படும் ஆணாதிக்க கட்டமைப்பு பெண் தொழிலாளர்கள் தங்களது உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் கொடுப்பதை தடுக்கும் ஒரு காரணியாக காணப்படுகின்றது. குடும்பம், சமூகம், அரசு என பல நிறுவனங்களை உள்ளடக்கிய இக்கட்டமைப்பின் கீழ் பெண் தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். எனவே, இத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராட வேண்டிய காலம்



வந்து விட்டது. இவர்கள் முதலாளித்துவ கட்டமைப்புக்கு எதிராகவும், ஆணாதிக்க கட்டமைப்பிற்கு எதிராகவும், போராட வேண்டிய தேவையின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

இவ் தொழிலாளர்களைப் பலப்படுத்தி அவர்களின் சுரண்டல்களையும், உரிமை மீறல்களையும், தட்டிக் கேட்கும் நிலையை உருவாக்குவதற்கூடாக தொழிலாளர்களைப் பலப்படுத்தும் செயற்பாட்டை தொழிற்சங்கங்களே செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தோனேசிய ஒழுங்குவிதி விளையாட்டு உபகரண தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளும், இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களும்

இரண்டு வருட காலம் இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தைகளின் பின்னர், இந்தோனேசிய புடவை, ஆடை மற்றும் பாதணிகள் தொழிற்சங்கங்களுக்கும், நாட்டின் ஒரு சில மிகப் பெரிய தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் Adidas, Nike மற்றும் Puma ஆகியவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் இத்தொழிற்சாலைகளிலிருந்து உற்பத்திகளை கொள்வனவு செய்யும் பிரதான விளையாட்டு உபகரண வணிகச் சின்னங்களுக்குமிடையில் ஜூன் மாதத்தில் முன்னுதாரணத்தை வழங்கக்கூடிய ஒரு ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது.

தொழிற்சங்கங்களில் சேரும் சுதந்திரம் தொடர்பான இந்த ஒழுங்குவிதி, பிரதான வழங்குனர்கள் தமது தொழிற்சாலைகளில் தொடரான பல சீர்திருத்தங்களை செயற்படுத்த வேண்டிய கடப்பாட்டினை எடுத்து வருகின்றது. அச்சீர்திருத்தங்கள் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன:

- வேலை கொள்வோரின் தலையீடில்லாமல் கம்பெனி வளாகத்திற்குள் தொழிற்சங்கங்களை அமைக்கும் சுதந்திரத்தை தொழிலாளர்களுக்கு வழங்குதல்.
- தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளை கடமை பொறுப்புக்களிலிருந்து விடுவித்தல்.
- ஒரு தொழிற்சங்கம் அமைக்கப்பட்டு ஆறு மாத காலத்திற்குள் ஒரு கூட்டு பேரம்பேசும் ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துதல்.
- கூட்டு பேரம்பேசலில் ஈடுபடும் தொழிற்சங்க பேராளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்த வகையையும் சேர்ந்த அச்சுறுத்தல்களிலிருந்து தவிர்ந்து கொள்ளல்.
- வேலைத் தளத்தில் தகவல்களை விநியோகிப்பதற்கும், காட்சிக்கு வைப்பதற்கும் தொழிற்சங்கங்களுக்கு அனுமதியளித்தல்.
- மேலும் வேலைத் தளத்தில் செயற்படுவதற்கான வசதிகளை அவர்களுக்கு வழங்குதல், மற்றும் ஒப்பந்தத்தை அமுல் செய்யும் போது ஏற்படக் கூடிய பிணக்குகளை தீர்த்து வைப்பதற்கென தகராறு தீர்வு பொறிமுறையொன்றை உருவாக்குதல்.


இந்த ஒழுங்குவிதியை எடுத்து வரும் பொருட்டு செயற்பட்டு வந்த இந்தோனேசிய தொழிற்சங்க கூட்டமைப்புக்களின் காங்கிரஸ் (KASDI) அமைப்பின் கல்வி மற்றும் பிரச்சார ஒருங்கிணைப்பாளரான சுமார்ட்டோ (பார்ட்டோ) இதனை ஒரு சிறிய, ஆனால் ஒரு முக்கியமான சாதனையாக குறிப்பிடுகின்றார். வேலைத் தலத்தில் தீர்த்து வைக்கப்பட வேண்டிய இன்னும் பல பிரச்சினைகள் இருந்து வருகின்றன என்றும் அவர் குறிப்பிடுகின்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் "அனைத்து தொழிற்சாலைகளிலும் தொழிற்சங்கங்களில் சேரும் சுதந்திரத்தை அமுல் செய்வதற்கான இவ்வுரிமைப் போராட்டத்தில் இந்தோனேசிய தொழிற்சங்கங்களும் சர்வதேச நியாய செயற்பாட்டு கூட்டமைப்பு (International Play Fair Alliance) என்பவற்றினால் கூட்டாக முன்னெடுக்கப்பட்டு வந்த முயற்சிகளின் விளைவாகவே இது சாத்தியமாகியது என்றார்.

## சர்வதேச வலைப்பின்னலின் விளைவால், ஆடைத்தொழிற்சாலை தொழிலாளர்களுடனான அனுபவ பகிர்வு

செங்கொடி பெண்கள் இயக்கத்தினால் மார்ச் மாத இறுதியில் ஒழுங்கு செய்யப்பட்ட சர்வதேச வலைப்பின்னல் நிகழ்வு, "ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றலும், அனுபவ பகிர்வும்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்றது. சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களுக்கான இந்நிகழ்வில் மெக்ஷிகோவின் தென்,வடபகுதியிலிருந்தும், நெதர்லாந்து நாட்டிலிருந்தும் அணித்திரட்டாளர்களும்.செயலூக்கவாதிகளும் வருகை தந்தது மட்டுமன்றி, இலங்கையில் செங்கொடி சங்க அணித்திரட்டாளர்களும், மற்றும் தொழிலாளர்களும், தேசிய சுதந்திர வர்த்தக வலய சங்கத்தைச் சார்ந்த அணித்திரட்டாளர்களும், தொழிலாளர்களும் இச்செயலமர்வில் பங்குபற்றியமை சிறப்பம்சமாகும். நாடுகள் வெவ்வேறாக இருந்தாலும், தொழிலாளர்கள் வர்க்கம் என்ற ரீதியில் ஆடைத்தொழிற்சாலை தொழிலாளர்கள் மீது திணிக்கப்படும் அடக்குமுறையில் எவ்வித வேறுபாடும் காணப்படவில்லை. வேலைநேர அதிகரிப்பு, வேலைப்பளு, குறைந்த ஊதியம் போன்ற பல்வேறு சுரண்டல்களும் இச்செயலமர்வில் கலந்துக் கொண்ட அனைத்து தொழிலாளர்களுக்கும் வெவ்வேறு அளவில் இருப்பது அடையாளங் காணப்பட்டது.

இவர்கள் தங்கள் அனுபவ பகிர்வின் போது, தத்தமது நாட்டில் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கையாளும் மூலஉபாயங்களை பகிர்ந்துக் கொண்ட போது, பல விடயங்களைக் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, அணித்திரட்டல் என்ற பதத்தின் ஆழமான விளக்கம், ஒவ்வொருவரும் அணித்திரட்டும் போது கையாளும் யுக்திகள் என்பன விரிவாக ஆராயப்பட்டது.

தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியமே தொழிலாளரின் பிரச்சினைக்குத் தீர்வாகும் என்ற செய்தி ஆழமாக மனதில் பதியப்பட்டதோடு, எதிர்காலத்தில் தொழிலாளர்கள் மத்தியில் (வெவ்வேறு நாட்டைச் சேர்ந்த) ஒத்துழைப்பை வலுப்படுத்தல் எவ்வாறு என்பது ஆராயப்பட்டு எதிர்காலச் செயல்திட்டங்களும் இச்செயலமர்வில் ஆராயப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கங்களின் பெண் தலைமைத்துவம்

இலங்கைத் தோட்ட தொழிலாளர் செங்கொடி சங்கத்தின், செங்கொடி பெண்கள் இயக்கத்தால் கடந்த 2011 டிசம்பர் 17, 18 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட "பெண்களின் தலைமைத்துவம் இல்லாத ஜனநாயகத்தைப் பற்றி பேச முடியுமா?" என்ற கருப்பொருளில் அமைந்த பிராந்திய மகாநாட்டின் இந்தியா, பங்களாதேஸ், இந்தோனேசியா, மலேசியா, நேபாளம் மற்றும் இலங்கை உள்ளடக்கிய தொழிற்சங்கவாதிகள், செயலூக்கவாதிகள் மற்றும் ஆய்வாளர்கள் கலந்துக் கொண்டனர். மாற்று தலைமைத்துவத்தை பெருந்தோட்டத்துறை



இந்தியாவின் தொழிற்சங்கவாதியான தோழர் சமீர்ரோய்

தொழிற்சங்கங்களில் கட்டியெழுப்புவது என்பது ஒரு பிரதான நோக்கமாக இருந்ததோடு, யதார்த்தபூர்வமான இலக்கு, கட்டமைப்பு, மூலஉபாயங்கள் எவ்வாறு பெண் தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதற்கு சாதக, பாதகமாக உள்ளன என்ற விடயம் ஆழமாக ஆராயப்பட்டது. குறிப்பாக "பெண் தலைமைத்துவம்" என்பதன் அர்த்தம் தற்போது பலராலும் தவறாக பயன்படுத்தப்படுவதை கருத்தில் கொண்டதோடு இப்பெண் தலைமைத்துவத்துக்கு



தோழர் தாரக் சௌத்ரி (பங்களாதேஷ்)

பால்நிலைஅறிவு, வர்க்க சிந்தனை, சமூக பகுப்பாய்வு எவ்வளவு அவசியமோ அந்த அளவுக்கு ஒரு



தோட்டக்கமிட்டி தலைவர்களான தோழர் சித்ராணி, தோழர் தேவிகா

பிரச்சினையை சரியாக அடையாளங் கண்டு அதனை சிறந்த முறையில் பகுப்பாய்வு செய்வதற்கூடாக சரியான, சுயாதீனமான தீர்மானத்தை எடுக்கக் கூடிய திறனும் அவசியம் என்று இங்கு சுட்டிக் காட்டப்பட்டது. இந்தியா, பங்களாதேஸ், **இந்தோனேசியா, மலேசியா, நேபாளம்** ஆகிய நாடுகளில் பிரதிநிதிகள் சமர்ப்பித்த ஆய்வறிக்கைக்கும் இலங்கையிலுள்ள பெருந்தோட்ட



செங்கொடி சங்கத் தலைவர் தோழர் மேனகா கந்தசாமி


தொழிற்சங்கங்களையும் ஒப்பு நோக்குகையில், ஆண் மையப்படுத்தலையும், தலைமைத்துவம் தொழிலாளர் வர்க்கத்தை சாராதோர் என்ற நிலையும், மற்றும் அதிகூடிய வறுமை நிலைக்குட்பட்ட அங்கத்தவர்களை கொண்டிருக்கும் நிலையும் தெளிவாக தெரிய வந்தது. இம்மகாநாட்டின் இன்னுமொரு சிறப்பம்சம், செங்கொடி பெண்கள் இயக்கத்தால் நடாத்தப்பட்ட ஆய்வறிக்கையின் விளக்கமும், தோட்ட கமிட்டி மற்றும் தலைமைத்துவத்திற்கு தயாராகிக்கொண்டிருக்கும் இளைஞர்களின் துணிச்சலான சுயகதைகளும் ஆகும். வறுமை, வன்முறை, இவைகளுக்கு மத்தியில் பல சவால்களுக்கு முகங்கொடுத்து எவ்வாறு தமது தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்துள்ளார்கள், என்ற உணர்வு பூர்வமான உண்மைக்கதைகள் சகலரது சிந்தனையையும் தூண்டிவிட்டது.



செங்கொடி பெண்கள் இயக்கத்தின் செயலாளர் தோழர் ஆனந்தி

அதுமட்டுமன்றி ஆய்வறிக்கையில் கூறப்பட்ட தலைமைத்துவத்திற்கு தடையாக இருக்கும் காரணிகளை நியாயப்படுத்துவதாக இந்த உண்மைச்சம்பவங்கள் அமைந்ததும் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

பெண் தலைமைத்துவம் என்பது பெயரளவில் பெண்களை தலைமைப்பதவிகளில் நியமிப்பது அல்ல என்பதோடு அப்பெண் தொழிலாளர்களை உரித்தாளுமையுடன் சுயாதீனமாக இயங்குவதற்கான வாய்ப்பையும் அதற்கான சூழலையும் ஏற்படுத்திக் கொடுத்து பெண்களின் தலைமைத்துவத்தை வளர்ப்பதற்கூடாக கட்டியெழுப்பக் கூடியதே உண்மையான தலைமைத்துவம் என்பதை மகாநாட்டின் இறுதியில் அதிகமானோரின் கருத்தாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தொடர்புகளுக்கு :
ஆசிரியர் "செங்கொடி"
443/1/1
வில்லியம் கொப்பல்லாவ மாவத்த
கண்டி - 081-4481761

செங்கொடி




செப்டம்பர்-பெப்ரவரி 2012

# உங்கள் உரிமை எது?
# உங்களது சம்பளத்தை நீங்களே பெற்றுக் கொள்ளுங்கள்




**- உங்களது உழைப்பிற்கேற்ற ஊதியத்தை**
**உங்கள் கையாலே பெற்றுக்கொள்ளுங்கள்**
**உங்களுக்கு இழைக்கப்படும் சுரண்டலை இன்றே தடுத்திடுங்கள்!**

## தராசு




டஸ்பலதா.

**உங்கள் தராசு**
**உடைந்திருக்கிறதா?**
எண்கள் தெளிவில்லாமல்
காணப்படுகிறதா?
தராசை பார்க்கும் உரிமை
உங்களுடையது.
தோழியர்களே! எமக்கு
இழைக்கப்படும்
சுரண்டலை தடுக்க நாமே எமது
தராசை பார்த்து கொழுந்தின்
நிறையை கணக்கிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org